புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஐங்குறுநூற்றில் உரிப்பொருள் மயக்கம்

**பொ.பரமேஸ்வரி,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*நவரசம் கலை மற்றும் அறிவியல்*
*மகளிர் கல்லூரி,*
*ஈரோடு.*

**முனைவர் பொ. இராதாஜெயலட்சுமி,**
*உதவிப்பேராசிரியர், நெறியாளர்*
*நவரசம் கலை மற்றும் அறிவியல்*
*மகளிர் கல்லூரி,*
*ஈரோடு.*

**ஆய்வுச்சுருக்கம்:**

*தொல்காப்பியர் குறிப்பிடும் முப்பொருள் கோட்பாட்டில் உரிப்பொருளானது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. முதலும் கருவும் இல்லாமல் கூட பாடல்கள் அமையலாம் . ஆனால் உரிப்பொருள் இல்லாமல் எந்த பாடலும் அமையாது . அத்தகைய உரிப்பொருட்கள் மயங்காது என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் சங்க பாடல்களிலும் கூட இரண்டு மூன்று உரிப்பொருட்கள் மயங்கி வருகின்றன. இத்தகைய உரிப்பொருள் மயக்கம் பற்றி தொல்காப்பியர் வெளிப்படையாக கூறவில்லையானாலும் அவருடைய நூலுக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் முதல் பலரும் உரிப்பொருள் மயக்கத்துக்கு வழிவகுத்துச் சென்றுள்ளனர். அத்தகைய வழிகாட்டலின் அடிப்படையில் ஐங்குறுநூற்றில் உள்ள உரிப்பொருள் மயக்கத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

*திறவுச்சொற்கள்*
*திணை உரிப்பொருள் உரிப்பொருள்மயக்கம் இரங்கல் சங்கஇலக்கியம் தொல்காப்பியம்*

## முன்னுரை:

*பண்டைய கால தமிழ் மக்களின் வாழ்க்கைநிலையை படம் பிடித்து காட்டுவன சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் ஆகும். இவ்விலக்கியங்கள் மூலமாகவே தமிழ் மக்களின் உணர்வையும் பாரம்பரிய வாழ்வையும், இயற்கையோடு இயற்கையாய் இயைந்து வாழ்ந்த வாழ்க்கை முறையையும் அறியமுடிகிறது.*
*இவ்வாறு வாழ்ந்த நமக்கு முந்தைய சமூகம், ஐன்ஸ்டன் குறிப்பிடுவது போல இயற்கையோடு ஒன்றி நிலம் மற்றும் சூழலுக்கேற்ப (காலம்) வாழ்விடத்தையும் உணர்வுகளையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். தாம் வாழும் இடச் சுழலுக்கேற்பவே ஒவ்வொரு திணையிலும் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறையுள், தொழில்கள், ஏன்? மனிதன் கடைபிடிக்கும் ஒழுக்கலாறுகள் வரை அனைத்துமே கடைபிடிக்கப்பட்டன இவ்வாறு கடைபிடிக்கப்பட்டவற்றில் உரிப்பொருளான ஒழுக்கலாறுகள் சில நேரங்களில் ஒரே திணைகளுக்கும் இரண்டு மூன்று கலந்து வருவதுமுண்டு. அவ்வாறு கலந்து வரும் உரிப்பொருள் மயக்கங்களை ஐங்குறுநூற்றின் நெய்தல் திணை பாடல்கள் வாயிலாக எடுத்துரைத்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## ஐங்குறுநூறு

*எட்டுத்தொகை நூல்களில் மூன்றாவதாக வைக்கப்படும் நூல் ஐங்குறுநூறாகும். 3 முதல் 6 அடி வரையிலான அடியளவு கொண்டது. இந்நூலில் திணைக்கு 100 பாடல்கள் வீதம் ஐந்து திணைகளுக்கும் ஐந்து புலவர்கள் 500 பாடல்களை இயற்றியுள்ளனர்.*

*மருதத் திணை - ஓரம்போகியார்*
*நெய்தல் திணை - அம்மூவனார்*
*குறிஞ்சித் திணை - கபிலர்*
*பாலைத் திணை - ஓதலாந்தையார்*
*முல்லைத் திணை - பேயனார்*

*ஒவ்வொரு நூறும் பத்து பத்து பாடல்களாக, தனித்தனி தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. தலைப்பானது செய்யுளில் பயின்று வரும் சொற்களாலோ அல்லது பொருளாலோ இடப்பட்டுள்ளது.யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் விருப்பத்திற்கு இணங்க கூடலூர் கிழார் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.இந்த 500 பாடல்களில் அம்மூவனாரால் பாடப்பட்ட நெய்தல் திணையில் காணப்படும் உரிப்பொருளை பற்றி இங்கு ஆராயப்படுகிறது.*

***நெய்தல் திணையின் உரிப்பொருள்***

*கடலும் கடலை சார்ந்த நிலப்பகுதியை நெய்தல் திணை என்று ஆன்றோர் கூறுவர்.இந்த திணைக்கு உரிய உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் தொடர்பான நிகழ்வுகளும் ஆகும். இரங்கல் என்றால் வருந்துதல் என்று பொருள். கடலுள் மீன் பிடிக்கச் சென்ற தலைவனை நினைத்து, காற்றும் மழையும் தொடர்வதால் தலைவனுக்கு ஏற்படும் துன்பத்தை நினைத்துக் கரையில் உள்ள தலைவி வருந்திக் கொண்டிருப்பாள். தலைவன் தலைவியை மணந்து கொள்ளக் காலம் நீட்டித்தல், தலைவியைக் காண வராதிருத்தல் போன்றவையும் தலைவியின் இரங்கலுக்குக் காரணங்கள் ஆகும். இத்தகைய வருத்தம்அல்லது வருத்தம் தொடர்பான செய்திகளே நெய்தல் திணையின் உரிப்பொருள் ஆகும்.*

***உரிப்பொருள்***

*ஐந்திணையிலும் வாழும் மக்களின் ஒழுக்கத்தை எடுத்துக் கூறுவது உரிப்பொருள் எனப்படும். இவ்வுரிப்பொருளை தொல்காப்பியர்,*

***“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங்காலை திணைக் குரிப்பொருளே” (தொல்.பொருள் நூ.16)***

*என்று குறிப்பிடுகிறார். அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகள் முறையே புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் ஒழுக்கங்களைக் கொண்டு அமைகின்றன என்கிறார். மேற்கூறிய இவ்வைந்து உரிப்பொருள்கள் தான் திணைக்கு உயிர்நாடியாக அமைகின்றன.இத்தகைய உரிப்பொருள்களின் இன்றிஅமையாமைப் பற்றிக் கூறும் போது, “உரிப்பொருள் என்பதே பாடலின் அடிக்கருத்து ஆகும். மூன்று பொருளும் அமையும் பாடல்களும் உண்டு. முதற்பொருளின்றிக் கருப்பொருளும் உரிப்பொருளும் மட்டுமே அமையும் பாடல்கள் சங்க இலக்கியத்தில் பெரும்பான்மை உள்ளன எனலாம். கருப்பொருள் இல்லாமல் உரிப்பொருள் மட்டுமே அமையும் பாடல்களும் பல உள. முதலும் கருவும் இன்றிப் பாடல் அமையலாம். உரிப்பொருளின்றிப் பாடல் அமையாது.” (தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு ப.38)என்று கூறி உரிப்பொருளின் முக்கியத்துவத்தை தமிழண்ணல் வெளிப்படுத்தியுள்ளார். இத்தகைய சிறப்பு வாய்ந்த உரிப்பொருள் சில திணைகளில் ஒன்றோடொன்று மயங்கிஇகலந்தும் வருகின்றன.*

***உரிப்பொருள் மயக்கம்:***

***“திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே***
***நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப***
***புலன்நன் குணர்ந்த புலமை யோரே”. (தொல்.பொருள்.நூ.14)***

*என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு உரை கூற வந்த நச்சினார்க்கியர், “**ஒரு நிலத்தின் கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வரும் என்பதூஉம், நிலன் இரண்டு மயங்காதெனவே காலம் இரண்டு தம்முள் மயங்குமென்பதூஉங் கூறினாராயிற்று**” என்று குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும் அவர்இ "உரிப்பொருள் மயங்குதல்" என்று கூறாது "திணை மயங்குறுதலும்" என்று கூறியுள்ளார்.*

*1.ஒரு உரிப்பொருளோடு ஒரு உரிப்பொருள் மயங்குதலும், ஓர் உரிப்பொருள் நிற்றற்குரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும்,*

*2.இவ்வாறே காலம் மயங்குதலும்,*

*3.கருப்பொருள் மயங்குதலும் பெறுமென்றற்கு,*

*திணையென்றது அம்மூன்றைனையுங் கொண்டே நிற்றல் என்று விளக்குமிடத்து, ஓர் உரிப்பொருளோடு ஓர் உரிப்பொருள் மயங்குதலைக் குறிப்பிட்டுள்ளார்.*

*நம்பியகப்பொருள் ஆசிரியர் முதல் கரு உரி எண்னும் முத்திறப் பொருள்களைப் பற்றி கூறும் போது,*

***“முத்திறப்பொருளும் தத்தம் திணையோடு***
***மரபின் வராது மயங்கலும் உரிய”***

*என்ற நூற்பாவில் முதல் கரு உரி எனும் மூன்று பொருட்களும் தத்தம் திணையோடு கூடி இலக்கண முறையின் வாராமல் பிற திணையோடு மயங்குதலும் உண்டு என்று கூறுகிறார்.இதனால் முப்பொருள்களும் அகப்பாடல்களில் மயங்கும் என்பதை அறிய முடிகிறது.*

*தொல்காப்பியத்திற்கு பின் எழுந்த மாறன் அகப்பொருளில் உரிப்பொருள், கருப்பொருள் மயங்கும் என்றும் முதற்பொருளில் நிலம் மயங்காது என்றும் விளக்கப்படுகிறது*

***“நலனுடை உரிப்பொருண் மயங்கிணும் நால்வகை***
***நிலன்மயங் காதென நிகழ்த்தினர் புலவர்”***

*எனும் நூற்பா மூலம் நால்வகை நிலம் அல்லாத உரிப்பொருள் மயங்கும் என்று பெறப்படுகிறது .*

*ஆனால் தொல்காப்பியர் மட்டும் உரிப்பொருள் மயங்காது மயங்கவும் கூடாது என்று குறிப்பிடுகிறார்.இதனை **“உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே”** என்ற நூற்பாவால் உணர்த்துகிறார். இத்தகைய கருத்துகளை எல்லாம் பார்க்கும் போது உரிப்பொருள் மயங்கும் என்பது விளங்குகிறது.ஆதலால் அகப்பாடல்களில் உரிப்பொருளானது மயங்கும் என்பதை நாமும் கொள்ளலாம் இந்த உரிப்பொருள் மயக்கம் ஐங்குறுநூற்றின் சில பாடல்களில் மயங்கி வந்துள்ளன.*

***நெய்தல் கண் குறிஞ்சி “அன்னை வாழிவேண் டன்னை உதுக்காண்***
***ஏர்கொடிப் பாசடும்பு பரியஊர்பு இழிபு***
***நெய்தல் மயக்கி வந்தன்று நின்மகள்***
***பூப்போல் உண்கண் மரீஇய***
***நோய்க்குமருந் தாகிய கொண்கன் தேரே”. (பா -101 )***

*இப்பாடலுக்குரிய துறை அறத்தோடு நின்றபின் வரைதற்குப் பிரிந்த தலைவன் வரைவொடு வந்தமை தோழி செவிலிக்குக் காட்டியது என்பதாகும்.*

*வரைவிடை வைத்து பொருளீட்டும் பொருட்டு பிரிந்த தலைவனை எண்ணி தலைவி நாளெல்லாம் அழுதழுது பசலை நோய்க்குஆளாகி விடுகிறாள். இதன் பொருட்டு இங்கு இரங்கல் உரிப்பொருள் முதன்மை உரிப்பொருளாக அமைந்துள்ளது. .தலைவன் வரைவதற்கு தேவையான பொருளை ஈட்டுவதற்கு தலைவியை பிரிந்து சென்றான் என்று குறிக்கப்பட்டுள்ளதால் பிரிதல் உரிப்பொருளும் உடன் கலந்து வந்துள்ளது .களவு வாழ்க்கையில் இருவரும் இணைந்து புணர்ந்தலை மேற்கொண்டனர் என்பது குறிப்பாக புலப்படுகிறது. எனவே இங்கு புணர்தல் உரிப்பொருளும் உடன் இணைந்து வருவதை உணரலாம்.*

***நெய்தற்கண் மருதம்***

***"கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே***
***ஒள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென***
***வெள்ளாங் குருகை வினவு வோளே" . (பா -122 )***

*இப்பாடலுக்குரிய துறை பெரும்பைப் பருவத்தால் ஒருத்தியோடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்தது என்பதாகும்.இப்பாடல் கற்பொழுக்கம்*

*சார்ந்ததாதலின் பாடலில் இருத்தல் உரிப்பொருள் அடிப்படை உரிப்பொருளாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியை பிரிந்து பரத்தையை நாடிச் செல்வதால் பிரிதல் உரிப்பொருள் கலந்து வர காணலாம் தலைவன் தன்னை பிரிந்து சென்றமைக்காக தலைவி ஊடல் உற்றமையும் உணரலாம். இதனால் ஊடல் உரிப்பொருளும் உடன் தோன்றி நிற்றலும் கருதுதத்தக்கது .மற்றொரு பாடலிலும்,*

***வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென***
***காணிய சென்ற மட நடை நாரை***
***கானல் சேக்கும் துறைவனோடு***
***யான் எவன் செய்கோ? பொய்க்கும் இவ் ஊரே? பா.154***

*இப்பாடலுக்குரியத் துறை தோழி வாயில் வேண்டி நெருங்கிய வழி, வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது என்பதாகும். இப்பாடலின் பொருள் வெள்ளாங்குருகை உள்ளுறையாக வைத்து பரத்தையை நாடிச்சென்ற தலைவனின் செயலைக்கூறி தலைவி தலைவனுக்கு வாயில் மறுப்பது என்பதாகும். கற்பொழுக்கம் சார்ந்த பாடல் ஆதலாலும், தலைவன் பிரிவினால் தலைவி அழுது புலம்பி தன் ஆற்றாமையை வெளிப்படுத்தி இருப்பதாலும் இரங்கல் அடிப்படை உரிப்பொருளாக அமைகின்றது. நிச்சயம் வருவான் என்ற எதிர்ப்பார்ப்போடு காத்திருப்பதால் இருத்தல் உரிப்பொருளும், உன் பிரிவால் ஊர் என்னை அலர் தூற்றுகிறதே என தலைவி தலைவனுக்கு வாயில் மறுப்பதால் ஊடல் உரிப்பொருளும் இணைந்து வருவதை உணரலாம்.*

***நெய்தல் கண் பாலை :***

***“கடற்கோடு செறிந்த வளைவார் முன்கைக்***
***கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்***
***கானல் ஞாழல் கவின்பெறும் தழையள்***
***வரையர மகளிரின் அரியளென்***
***நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோளே”. (பா -191 )***

*இப்பாடலுக்கு உரிய துறை தலைவன் பாங்கனிடம் தலைவியின் சிறப்பை எடுத்துரைத்து பிரிவாற்றமையை கூறியதாகும்.*

*இப்பாடலில் தலைவன் தலைவியை பிரிந்து வாழ இயலாது மனம் சிதைந்து தளர்வுறுகிறான். மீண்டும் அவளை அடையாவிடின் யான் இனிக் கணமும் உயிர்வாழேன் என்று கூறியமையால் தலைவனின் இரங்கல் இங்கு முதன்மை உரிப்பொருளாகவும்இ களவு காதலர்கள் ஆதலால் மீண்டும் தலைவியை அடைய தலைவன் விரும்புவதால் புணர்தல் உரிப்பொருளும்இ பொருளீட்டும் பொருட்டு பிரிந்தமையால் பிரிதல் உரிப்பொருளும் இணைந்து வருவதைக் காணலாம். தொல்காப்பியர் கூறிய ஐவகை உரிப்பொருட்களில் எந்த உரிப்பொருளும் மற்ற பொருட்களின் துணை இல்லாமல் தனித்து நிகழ வாய்ப்பில்லை.ஒன்றையொன்று சார்ந்தே அமையும். பாடலில் எந்த உரிப்பொருள் முதன்மை பெற்று விளங்குகிறதோ அதை அடிப்படை உரிப்பொருளாகவும் அதனைச் சார்ந்து பாடலை நிறைவு செய்ய துணை நிற்கும் உரிப்பொருளை துணைமை உரிப்பொருள் என்று கொள்ளலாம்.*

*ஆகவே மேற்கூறிய பாடல்களிலெல்லாம் இரங்கலை மையப்படுத்தி நிற்பதால் இரங்கலை முதன்மை உரிப்பொருளாகவும் இஅதனையொட்டி அமையும் உணர்வுகளான பிரிதல்இபுணர்தல்இஊடல்இ இருத்தல் என்பனவற்றை துணைமை உரிப்பொருள்கள் எனக்கொள்வதே பொருத்தமாக உள்ளது.*

***முடிவுரை:***

*ஐங்குறுநூற்றினை போல் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் உரிப்பொருள் மயக்கமானது தொடர்ந்து அவதானித்து தான் வருகிறது அவற்றை நுணுகி ஆராயும் போது தான் அவற்றின் தன்மை வெளிப்படும். எனவே ஒரு குறிப்பிட்ட நிலத்திற்குரிய ஒழுக்கம் அந்த ஒரு குறிப்பிட்ட நிலத்தில் மட்டும்தான் இடம்பெறும் என்றும் இ ஒரு திணைக்குள் ஒரே ஒரு உரிப்பொருள் தான் இடம்பெறும் என்றும் எண்ணாமல் தொடர்ந்து ஆராயும் போது தான் அந்த திணையில் காணப்படும் உரிப்பொருட்களின் மயக்கத்தை அறிய இயலும் என்ற உண்மை இவ்வாய்வின் வழி புலப்படுகிறது*

**அடிக்குறிப்புகள்**

*1.வ த. இராமசுப்பிரமணியம்இ தொல்காப்பியம் பொருளதிகாரம் (மூலமும் உரையும்)இ ப – 32*
*2. தமிழண்ணல்இ சங்க இலக்கிய ஒப்பீடுஇ ப - 38*
*3.வ த. இராமசுப்பிரமணியம்இ தொல்காப்பியம் பொருளதிகாரம் (மூலமும் உரையும்)இ ப - 31*
*4.நச்சினார்க்கினியர் - தொல்காப்பியப் பொருளதிகாரம் (அகத்திணையில்இ புறத்திணையியல்) ப - 27*
*5. வ.த. இராமசுப்பிரமணியன்இ நம்பியகப்பொருள் (விரிவுரை) ப- 202*
*6.சு.செல்லையா பிள்ளைஇ மாறனகப்பொருள் ஆய்வுப் பதிப்பும் அதன் அகக் கொள்கைகள் திருப்பதி கோவையில் பயிலும் நிலையும் (பகுதி - 1)இநு.300*
*7.வ த. இராமசுப்பிரமணியம்இதொல்காப்பியம் பொருளதிகாரம் (மூலமும் உரையும்)இ ப - 31*
*8.புலியூர்கேசிகன் ஐங்குறுநூறு மருதமும் நெய்தலும் ப - 134*
*9. மேலது ப- 159*
*10. மேலது ப - 185*
*11. மேலது ப- 229*


**துணைமை நூல்கள்**

*1 . வ.த. இராமசுப்பிரமணியம் தொல்காப்பியம் பொருளதிகாரம் (மூலமும்உரையும்)இ*
*பூம்புகார் பதிப்பகம்*
*பிரகாசம் சாலை*
*சென்னை – 08*

*2. தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு*
*(இலக்கிய கொள்கைகள்) 2014*
*மீனாட்சி புத்தக நிலையம்*
*மயூரா வளாகம்*
*48 தானப்ப முதலியார் தெரு*
*மதுரை - 01*

*3. நச்சினார்க்கினியர் உரை தொல்காப்பியம் பொருள் அதிகாரம் 1977 கழக வெளியீடு*
*சென்னை - 01*

*4. வ.த.இராமசுப்பிரமணியன் நம்பியகப்பொருள் (விரிவுரை) 2012 முல்லை நிலையம்*
*9இபாரதி நகர் முதல் தெருஇ*
*தி.நகர்*
*சென்னை - 17*

*5. செல்லையா பிள்ளை மாறனகப்பொருள் ஆய்வுப் பதிப்பும் அதன் அகக் கொள்கைகள்*
*திருப்பதி கோவையில் பயிலும் நிலையும் (பகுதி - 1)இ*
*தி.பார்க்கர் பதிப்பகம், சென்னை*


**ஆய்வு அணுகு முறைகள்**

1. *விளக்க முறை அணுகு முறை*
   *நூற்பாவிற்கு விளக்கம் தரும் போது விளக்க முறை அடிப்படையிலும்*
2. *\பகுப்பு முறை அணுகு முறை*
   *உரிப்பொருட்களின் மயக்கத்தை திணை வாரியாக கூறும் போது பகுப்பு முறை அடிப்படையிலும்*
3. *ஒப்பீட்டு முறைஅணுகு முறை*
   *தொல்காப்பியா மற்றும் பிற நூலாசிரியரின் கருத்துக்கனை ஒப்பிடும் போது ஒப்பீட்டு முறை அடிப்படையிலும்*
4. *தொகுப்பு முறைஅணுகு முறை ஆய்வின் கருத்தை தொகுத்து கூறுகையில் தொகுப்பு முறை அடிப்படையிலும்*

*எள்பதாக பல ஆய்வு அணுகு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********